
# எண் சோதிட மறுமலர்ச்சி




ரியர் : பண்டிட் K. N. நவரத்தினம் A. F. A.,

சிரியர் : L. L. செல்வநாதன்

# எண் சோதிட மறுமலர்ச்சி

★

ஆசிரியர் :

பண்டிற் K. N. நவரத்தினம் A. F. A.

உதவி ஆசிரியர் :

L. L. செல்வநாதன்

ஆதாரம் :

திரு. ச. அழகரத்தினம்

*ALL RIGHTS RESERVED*

211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். போன் : 8134

14-12-80

# பதிப்புரை

என் சோதிட மறுமலர்ச்சி என்னும் இவ்வரிய நூல் புராதன இந்துசமய மூலக் கொள்கைகளையும், விஞ்ஞானக் கருத்துக்களையும், தர்க்க சாஸ்திரக் கருத்துக்களையும் கொண்டதாக வெளிவருகின்றது. இந்நூலில் அமைந்த மூலக்கருத்துக்கள் இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தினால் ஆய்வுக்கு எடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரசுரத்திற்கு அனுமதிக்கப்பட்டவை.

இவ்வரிய கைங்கரியத்தை நிறைவேற்றுவதில் சோதிட ஆய்வுமன்றமும், கலை இலக்கிய ஒன்றியமும் பெருமையடைகின்றது.


**ஐ. சச்சிதானந்தா**
செயலாளர்

**நா. சுப்பிரமணிஐயர் M. A.**
யாழ். பல்கலைக் கழக
தமிழ்த்துறை விரிவுரையாளர்
(தலைவர் இலங்கைச் சோதிட ஆய்வு மன்றம்)


---

## அட்டைப்பட விளக்கம்

உங்களது பிறந்த திகதியிலுள்ள பிறப்பு எண்ணானது, நீங்கள் இவ்வுலகின்கண் மனிதர்களுக்குப் புலப்படும் வெளித் தோற்றங்களையும் குணநிசயங்களையும் குறிக்கும் ஓர் அடையாளமாகவே இயங்குகின்றது. உங்களது விதி எண்ணானது உங்கள் உள் புதைந்து கிடக்கும் மறைமுக ஆற்றல்களையும் திறமைகளையும் குறிக்கும் குறியீடாக இருக்கின்றது. புதைந்து கிடக்கும் உங்கள் ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக் கொணர்ந்து, உங்கள் வெளித் தோற்றத்தின் மூலம் பிரகாசிக்கச் செய்யும் முக்கிய செயலைப் பெயரெண்ணே ஆற்றுகின்றது.

அட்டைப் படத்தில் நீங்கள் ஓர் தண்ணீர்த் தொட்டியைக் காண்கின்றீர்கள். தொட்டியில் தேங்கியுள்ள நீரை உங்கள் விதியெண்ணால் புலப்படுத்தப்படும் உங்களுள் புதைந்துள்ள திறமைகளாகக் கொள்வோம். தொட்டியிலுள்ள நீரை வெளியே கொண்டு வரப் பயன்படும் தண்ணீர்க் குழாயை, உங்கள் பிறப்பு எண்ணால் குறிக்கப்படும் வெளித் தோற்றமாகக் கொள்ளலாம். குழாயின் முனையில் அமைந்துள்ள ''நீர் திறவாயில்'' கருவியை உங்களது பெயரெண்ணாகக் கொள்ளுமிடத்தில், நீர் திறவாயில் கருவியானது பிழைபட இயங்கும்போது எவ்வாறு தொட்டியிலுள்ளநீரைத் தகுந்த முறையில் நாம் வெளியே கொண்டு வந்து பயன்படுத்த முடியாதோ அவ்வாறே உங்களது பெயர் எண்ணும் பிழைபட அமைந்திருக்கும் போது, ஓர் சீரான முறையில் உங்கள் ஆற்றல்களும், திறமைகளும் இந்த உலகின்கண் பிரகாசத்திற்கு வரமுடியாது, உங்களுள் புதைந்து கிடந்து இவ்வுலகிற்குப் பயன் கொடாது போகும். இதிலிருந்து ஒரு மனிதனுக்குப் பெயர் அமைப்பதற்கு எண் சோதிடமானது எத்துணை இன்றியமையாதது என்பதை நீங்கள் இலகுவில் புரிந்து கொள்வீர்கள்.

# எண் சோதிடமும்
# புராதன மூல விளக்கங்களும்

எண்சோதிடம் ஓர் விஞ்ஞான சாஸ்திரம். சோதிடம், கைரேகை, எண் சோதிடம் யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. இந்து சோதிடத்தில் வரையறுக்கப்பட்டதும், பண்டைய காலந்தொட்டு நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்ததுமாகிய ஒன்பது கிரகங்களுமே, இச் சாஸ்திரங்களுக்கு மூலாதாரமானவை. இந்து சோதிடத்தின் விளக்கங்கங்கள் யாவும், எண் சோதிடத்தில் மிகச் சிறப்பாகப் பொருந்தியிருப்பதை, விஞ்ஞானக் கண் கொண்டு பார்க்கும் எவரும் தெளிவாகப் புரிந்துகொள்வர்.

எண் சோதிடமானது எளிதாக விளங்கக்கூடியதும், தனிமனிதனின் அடிப்படைக் குண குணங்களை, விஞ்ஞான ரீதியில் விளங்கப் படுத்தக்க கூடியதுமாயிருக்கின்றது. ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை முறையே, சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கிரகங்களே ஆளுகின்றன.

தற்காலத்தில் இதற்கு மாறான ஓர் விளக்கம் மக்களிடையே திணிக்கப்பட்டு, அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஒவ்வாத முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விளக்கம் என்னவெனில், ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை முறையே, சூரியன், சந்திரன், வியாழன், இராகு, புதன், வெள்ளி, கேது, சனி, செவ்வாய் ஆகிய கிரகங்கள் ஆளுகின்றன என்பதேயாகும். முதன்முறையாக ''கீரோ'' என்ற புனைப்பெயருடன், இவ்வெண் கலையை அறிமுகப்படுத்தியவர் கொடுத்த விளக்கத்தையே பலரும் ஏற்று, அதையே நடைமுறைப்படுத்தியுள்ளனர். ஆனால் ''கீரோ'' விற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஞானிகள், எண்களுக்குரிய கிரகங்களை இந்து சோதிடத்தில் வரையறுத்துவிட்டுச் சென்றுள்ளார்கள். ''கீரோ'' அவர்களும் தாம் கீழைத்தேசத்திலிருந்து தான் பல அரிய விடயங்களைப் பயின்றதாகத் தமது நூல்களில் கூறியுள்ளார்.

ஆனால் இந்து சோதிடத்தை முதன் முதல் உலகிற்களித்த'' ''மகாரிஷி பராசரர்'' அவர்கள், தாம் அருளிய'' ''பிருஹத்பராசரஹோரை'' என்ற நூலில், கிரகசாயன அவஸ்தைகளை விபரிக்கும் பகுதியாகிய ஏழாம் அத்தியாயத்தில் கிரகங்களுக்குரிய எண்களைத் தெளிவாகப் பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

சூரியன் — 1, சந்திரன் — 2, செவ்வாய் — 3, புதன் — 4, வியாழன் — 5, வெள்ளி — 6, சனி — 7, இராகு — 8, கேது — 9. மேலும் ''சோதிட சில்லறைக் கோவை'' என்னும் மிகப் பழைய

நூலில் "பல்கலை ஆரூடம்" என்ற பகுதியில், ஒன்று தொடக்கம் எட்டு வரையுமுள்ள எண்களுக்கு ஆரூடம் கூறப்பட்டிருக்கின்றது. இப்பகுதியில், எண்களுக்குரிய கிரகங்கள் மேற்கூறிய ஒழுங்கு முறையில், சூரியன் முதல் இராகுவரை ஒழுங்காக விபரிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் ஒன்பது என்ற எண் கூறப்படவில்லை. ஒன்பது இங்கு எட்டு எண்ணில் அடக்கம் என்பதையும், மேலும் ஒன்பது எண்ணின் சேர்க்கையால் மற்ற எண்களின் ஸ்தானங்கள் மாறுபடாதிருப்பதும், அத்தன்மையாலேயே இவ்வெண் கூறப்படாது விலக்கப்பட்டதும், அறியற்பாலது.

ஒரை சாஸ்திரமானது கீழைத் தேசத்திலும், மேலைத் தேசத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அனுகூல சாஸ்திர முறையாகும். பிரபஞ்ச வெளியில் கிரகங்கள் அமைந்துள்ள வரிசைக் கிரமத்திற்கொப்ப, ஒரை ஒழுங்கு முறையும் இயல்பாகவே அமைந்துள்ளது. ஆகக்கூடிய தூரத்திலுள்ள சனிக்கிரகத்தினது சனி ஓரையில், சனிக்கிழமையின் முதல் ஒரையானது ஆரம்பித்து, வரிசைக் கிரமமாக இருபத்திநாலு ஒரைகள் அறுபது நாழிகைகள் வரை முடிந்த பிற்பாடு, இருபத்தைந்தாவது ஓரையாக வரும் ஓரையில் அதாவது அவ்வோரையின் நாமத்தில், அடுத்தநாள் ஆரம்பித்துத் தொடர்ந்து நாளாந்த ஒழுங்கு முறையில் செல்லுகின்றது. இவ்வாறே ஞாயிறு, திங்கள் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற நாட்கள் ஒன்று முதல் ஏழுவரை, எண்ணுவரிசையில் ஒழுங்காக அமைந்துள்ளன. இது ஓர் அடிப்படை ஒழுங்கு நிறைந்த ஒரு கிரக எண்ணு முறையாகும். இவ்வெண்ணுமுறையானது, "திருஞான சம்பந்த மூர்த்தியின்" தேவாரத்திலும் "ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும்" என்றவாறு ஒழுங்காக விளக்கப்பட்டுள்ளது. ஒழுங்கு முறையான இவ்வேழு கிரகங்களும் ஏழு தேவர்களாகவே கொள்ளப்படுகின்றன. இடையில் ஏற்பட்ட அசுர தாக்கத்தின் காரணமாகவே எட்டு ஒன்பது என்ற இவ்விரண்டு பாம்புகளாகிய (சாயக் கிரகங்களாகக் கொள்ளப்படும்) இராகு கேதுக்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. எட்டு ஒன்பது எண்களாகிய இராகு, கேதுக்கள் உற்பத்தியான வரலாறு, நமது இந்து சமயத்தில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. இராகு என்ற அசுரன் தேவஸ்தானத்தை அடைவதற்கு முயன்று, தேவர் போன்று கபடமாக நடித்து, விஷ்ணுவிடமிருந்து அமுதத்தைப் பெற்று உண்டதற்குத் தண்டனையாக, விஷ்ணுவின் சக்கரத்தினுல் தலையாகவும் உடலாகவும் துண்டிக்கப்பட்டதாகவும், அவை தேவஸ்தானத்தையடைந்து இராகு கேதுக்களாகச் சுற்றுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் சூனியமாகிய "சைபர்" பிரபஞ்ச வித்தாகும். இதற்கு ஆதியும் அந்தமும் இல்லை, இது தன்னிலிருந்து உற்பத்தியாகும் மற்றைய எண்களின் முன் வந்தால் செயல்பாடற்றும், பின்வந்தால்



அவ்வெண்களின் சக்திகளைப் பெருக்கும் செயற்பாடுடையதாகவும் இயங்கும். மேலும் பிரபஞ்ச வித்தான பூஜ்யத்திலிருந்து சிவமாக மலரும் ஒன்று எண்ணுகச் சூரியனும், சிவத்திலிருந்து அடுத்து உற்பத்தியாகும் சக்தியாக, இரண்டு எண்ணின் அம்சமான சந்திரனும், ஒன்றும் இரண்டும் இணைந்து மூன்ருகும் இயங்கு சக்தியான இளமை நிறைந்த முருகனுல் ஆளப்படும் செவ்வாயும், இளமையுணர்வின் துள்ளல் நிறைந்த அனுபவங்களால் உண்டாகும் புத்திநுட்பத்தை வரையறுக்கும் நாலு எண்ணை ஆதிக்கம் செலுத்தும் விஷ்ணுவினுல் ஆளப்படும் - புதனும், ஐந்தாவது படியாகப் புத்தி நுட்பத்தால் ஏற்படும் வளர்ச்சியையும் - விரிவையும் குறிக்கும் பிரமனுல் ஆளப்படும் வியாழனும், ஆருவது படியாக வளர்ச்சியின்போது அடையும் செல்வ சௌபாக்கியங்களைக் குறிக்கும் தேவதையான இலட்சுமியால் ஆளப்படும் சுக்கிரனும், ஏழாவது படியாக வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் - நியதியை ஆதிக்கம் செலுத்தும் இயமனினுல் ஆளப்படும் சனியும், எட்டாவது படியாக வளர்ச்சியானது நியதியை மீறத் துணியும் பொழுது - அழிவு சக்தியாக உருவாகும் காளியினுல் ஆளப்படும் இராகுவும், அழிவின்பின் ஒன்பதாவது படியாக மறுபிறவியெடுத்து விமோசனத்தைக் குறிக்கும் - சித்திரபுத்திரனுல் ஆளப்படும் கேதுவும், ஒழுங்கு முறையாக எண் - கிரகம் - ஆளும் தேவதைகள் - என்ற வரையறையில் வரிசைக் கிரமமாகவும் தொடர்பாகவும் அமைந்திருப்பது நிரூபிக்கற்பாலது.

# கிரக விளக்கங்கள்

ஒன்று எண்ணை ஆளும் சூரியன், உலகத்தின் மூலாதாரமான வெளிச்சம், வெப்பம், சக்தி யாவற்றையும் வழங்கி, உலகத்திலுள்ள ஜீவராசிமுதல் ஏனைய வர்க்கங்களும் பலுகிப் பெருகும் வண்ணம் இயங்கி வருவதால், ஒன்று எண்ணை முதன்மையான சூரியனுக்கு வழங்கியது மிகவும் பொருத்தமானதே. இவ்வெண்ணில் பிறந்தவர்கள் உயர் அந்தஸ்திலும், அதிகாரபீடத்திலும், பிரபுத்துவ நிலையிலும் வாழ்வதற்கும், இவர்களது முன்னேற்றம், வளர்ச்சி பிரபல்யம், முதலியவற்றை எடுத்துக் காட்டுவதற்கும், சிறப்பான தலையான முதல் எண்ணாக இது இருப்பது நியாயமானதேயாகும்.

அவ்வண்ணமே சூரியனுக்கு அணித்தாகிய சந்திரன், சூரியனிலிருந்து ஒளியைப் பெற்றுக் குளிர்ச்சியைப் பரப்பியும், அதில் தங்கியிருந்து வளர்தலும் தேய்தலுமாகிய தனது மாறும் பிறைகளைக் காட்டியும், இயங்குகின்றது. இரண்டு எண்ணால் ஆளப்படுவோரின் குண குணங்களை நோக்குமிடத்து, அவர்களின் சார்ந்து வாழும் தன்மையையும், மாறுதல் குணங்களாகிய சலனத்தையும் ஒப்புநோக்கி எண் இரண்டைச் சந்திரன் ஆள்வதாகக் கொள்வது நியாயமானதே. சந்திரனுடைய குணகுணங்கள் முழுமையும் இரண்டு எண்ணால் ஆளப்படுபவர்களுக்கு அமைந்திருப்பதை நாம் துல்லியமாக உய்த்துணரக்கூடியதாயிருக்கின்றது.

ஆனால் மூன்று எண்ணானது, கொதிப்பு, பொறுப்பு, போராட்டம், புரட்சி, எழுச்சி, தாக்கும் தன்மை இவைகளைக் காட்டுகின்றது. இக்குணங்கள் முன்னோர் இந்து சாஸ்திரத்தில் கூறியதற்கொப்பவே, செவ்வாய்க்கிரகத்தின் குண குணங்களுடன் பொருந்தியிருப்பதனால், செவ்வாய்க்கிரகமே மூன்று எண்ணை ஆளுகின்றது என்பதை ஒப்புக்கொள்வது தீர்க்கமானதே. குருக்கிரகமானது குளிர்ச்சி, வளர்ச்சி, விரிவு முதலிய குணகுணங்களுக்கு எடுத்துக்காட்டாக நிற்கின்றது. இது கிரகங்களுக்குள்ளே மிகச் சுபக்கிரகமாக, எல்லாச் சோதிட அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே கொதிப்பும், போராட்டகுணமுமிக்க மூன்று எண்ணை ஆளும் கிரகமாகக் குருக்கிரகத்தைக் கொள்வது நியாயத்திற்கு மாறானதே. ஆனால் யுத்த காரகனும், கிழமை நாட்களில் மூன்றாவதாக அமையப்பெற்றவனுமாகிய செவ்வாயின் குண குணங்களை மூன்று எண்ணிற்குக் கொடுப்பது முடிவானதாகும்.

நான்கு எண்ணானது நானாவிதவிடயங்களை அறியும் உலகஞானம், கணிதவல்லமை, விகடப்பேச்சு புத்திக்கூர்மை, சாமர்த்தியம் ஆகிய குணகுணங்களை அளிக்கின்றது வாரத்தின் நாலாம் நாளை ஆளும் புதன் கிரகமானது, விவேகம், பலபொருள் ஆராய்ச்சி, புத்தி, யுக்தி முதலிய குணாதிசயங்களையே தோற்றுவிக்கின்றது. எனவே நான்காம்



எண்ணைப் புதனுக்குரித்தாக்கியிருப்பது நியாயமானதே. ஆனால் இவ்வெண்ணிற்கு இராகுவை ஆளும் கிரகமாக வழங்கியமை வாரக்கிரக ஒழுங்கு முறைக்கோ அன்றேல் கிரகங்களின் குணகுணங்களுடனோ ஒவ்வாத வண்ணம் அமைந்திருப்பது அவதானிக்கற்பாலது. இராகு நச்சுத்தன்மை, உலகமாய இச்சை, ஆர்ப்பாட்டம், பயங்கரம், நெருக்கடி முதலிய குண குணங்களையே தோற்றுவிக்கின்றது. இக்குணங்கள் நாலு எண் ஆதிக்கக் குணங்களுடன் வேறுபடுகின்றன. எனவே புதன் கிரகமே நாலு எண்ணை ஆளுவதென்பது வெள்ளிடைமலையாகும்.

இதே போன்று ஐந்தாவது கிழமை நாளை ஆளும் குருக்கிரகம், எண் ஒழுங்கில் ஐந்தாம் எண்ணை ஆளுகின்றதென்பது துணிபு. ஐந்தாம் எண் துணிவிற்கும், கூட்டுறவிற்கும், ஆழ்ந்த தத்துவ அறிவிற்கும், விரிவிற்கும், விரிவினால் ஏற்படும் வியாபார நடவடிக்கைகளுக்கும், வளர்ச்சிக்கும், தெய்வீக செயல்களுக்குமுரியது. சுபகுணங்கள் மிக்க குருக்கிரகத்தின் குணங்களும், இவ்வாறே அமைந்திருக்கக் காண்கின்றோம். எனவே குருவே ஐந்து எண்ணை ஆளுகின்றது என்பதே ஏற்கக்கூடிய முடிபாகும்.

அடுத்த எண்ணாகிய ஆறும் எண்ணைச் சுக்கிரன் ஆளுகின்றதென்று கூறப்பட்டிருக்கின்றது. சுக்கிரன், கிழமை நாளில் ஆறும் நாளையே ஆளுகின்றது. மற்றும் அதனுடைய பண்புகளாகிய காதல், இலௌகிகம், இலட்சுமிகரம், கலைஞானம், இன்பவாழ்வு முதலிய குண குணங்கள் ஆறும் எண்ணுடன் பொருந்தி நிற்பதால், ஆறும் எண்ணைச் சுக்கிரனே ஆளுகின்றதென்று கூறப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

ஆனால் ஏழு எண் ஓர் ஆழ்ந்த தெய்வீக எண். இவ்வெண் ஆதிக்கர் சுயநலமற்ற சேவையும், துலாக்கோல் நீதியும், கண்ணியமும், தெய்வீக வாழ்வும், அசாதாரணப் போக்கும், ஆழ்ந்த சிந்தனையும், நுண் உணர்வும் அமையப்பெற்ற தனிப்பண்புமிக்கவர்கள். கிழமைகளில் ஏழாம் நாளை ஆளும் சனிசுவரனுக்கே இவ்வெண்ணைக் கொடுப்பது ஒப்புக்கொள்ளக்கூடியதே, இதற்கு மாறாகக் கேதுவைக் கொடுப்பது தர்க்கரீதியாகவோ சமயஞான ரீதியாகவோ விஞ்ஞான ரீதியாகவோ ஏற்கக்கூடியதொன்றல்ல. கேது மோட்சத்தை விரும்பி, அதை அடைவதற்குப் புரட்சிகரமான முறையில் போராடி நிற்பவர்களைக் குறிப்பதாகும். எனவே 7 எண்ணிற்குக் கேது பொருத்தமற்றதே. நீதியின் அடையாளச் சின்னமாம் துலாக்கோலுடன் அமைந்த சனீஸ்வரனே, பொருத்தமானவரென்று கொள்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதேயாகும்,

சர்ச்சைக்குரிய எட்டாம் எண்ணைச் சர்ச்சைக்குரிய இராகு ஆள்வதே முறையாகும். இராகு உயர்ச்சி, வீழ்ச்சி, தடை, தாக்கம், இன்னல், கவலை மாயை, மயக்கம், மாயா இச்சை, பொதுவுடமை

ஜனநாயகம், ஒழுங்கு முறைக்கு மாறான விசித்திரக் கொள்கைகள், சிந்தனைகள், ஞானம் முதலியவற்றைக் குறிக்கும். இவ்வெண் ஆதிக்கர் இத்தகைய வரட்சித்தன்மையான, இன்னல் நிறைந்த மாயையில் சிக்கித் திணறுவதைக் காண்கிறோம். இராகுவானது சூரிய சந்திரரைக் காலாகாலத்தில் தனது கிரகணத்துள் உட்படுத்துவதுபோல், இவ்வெண்ணால் ஆள்பவர்களையும் அவ்வாறு சோதனை, வேதனைகளுக்கு உட்படுத்துகின்றதென்பது தெளிவானதே. எனவே எட்டு எண்ணை இராகுவே ஆள்கின்றது எனக்கொள்வதே பொருந்தக்கூடியதாயுள்ளது.

கேது ஓர் மோட்சகாரகக் கிரகம். ஒன்பது எண்ணில் பிறந்தவர்கள், அடக்கப்பட்ட தளைகளிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரத்தையடைய வீராவேசத்துடன் போராடுபவர்களாகவும், உலகப் பிடியினின்று விலகிப் புரட்சிகரமான முறையில் மோட்சத்தை அடைய விரும்புகிறவர்களாகவுமே காணப்படுகின்றார்கள். எனவே கிரக ஒழுங்கு முறையில் ஈற்று எண்ணாகிய ஒன்பதைக் கேதுவே ஆள்வதாகக் கொள்வது நீதி.

**விசேட குறிப்பு :** இம் முகவுரையில் நாம் முழு விபரங்களையும் அளிக்க முடியாமலிருப்பதனால், பின் அமையும் ஒவ்வொரு எண்ணுக்குமுரிய தனித்தனி அத்தியாயங்களில் நவீன விஞ்ஞான விளக்கங்களையும் விசேட இயல்புகளையும் ஆராய்வோம்.

## எழுத்துக்கள்

ஆங்கில எழுத்துக்களுக்குக் கொடுக்கப்பட்ட பெறுமானங்கள், எமது ஆராய்ச்சியில் பொருத்தமாக இருக்கக் காண்பதால் அதில் எவ்வித மாற்றமுமில்லை. ஒவ்வொரு தனி எழுத்திற்கும் ஒலி அசைவு உண்டு. அம் முறைப்படி பார்க்கும்போது தமிழ் எழுத்திற்கு ஒலி அசைவு இல்லையா? என்ற வினா எழுகின்றது. தமிழ் எழுத்துக்கும் ஒலியசைவு உண்டு. அவற்றையும் நாங்கள் பின்பு சமர்ப்பிப்போம்.

எண்கள் பலதரப்பட்டவை. ஒருவரது பிறந்த திகதியை மாத்திரம் கொண்டு கணிக்கும் எண்ணிற்குப் பிறப்பு எண் என்று பெயர். பிறந்த முழுத் திகதியையும் கூட்ட வரும் எண்ணிற்கு விதிஎண் என்று பெயர். ஒருவருடைய பிறந்த திகதியில் திரும்பத்திரும்பக் குறுக்கிடும் எண்ணிற்கு முதன்மை எண் என்று பெயர். ஒருவரது பெயர் எழுத்துக்களின் பெறுமதிகளைக் கூட்டிவரும் எண்ணிற்கு பெயர் எண் என்று பெயர். பெயரின் முதல் எழுத்தால் வரும் எண்ணிற்குத் திசை எண் என்றும், சந்தர்ப்ப முறைகளினால் அமையும் எண்ணிற்குச் சந்தர்ப்ப எண் என்றும் பெயர்.

எனவே எண்கள் ஆறுவகைப்படும். இவ்வெண்களின் முக்கியத்துவத்தை ஆராயப்புகின், ஒருவருடைய பெயரில் வரும் எண்ணானது அவரின் பிறந்த எண்ணினுடனோ, அல்லது விதி எண்ணினுடனோ, அல்லது முதன்மை எண்ணினுடனோ பொருந்தி அமையாதொழின், அவரது ஆற்றல்கள் செய்கைகளினால், அவர் உழைத்த உழைப்புக்கேற்ற பெறுபேறுகளை அடைவ்தற்குரிய சந்தர்ப்பங்களை, வழங்காது விலகி நிற்கும். இதனால் ஒருவரது ஆற்றல்கள், செய்கைகள் முற்றுப் பெறுந்தன்மைக்கு எதிர்மாறான நிலையில் பெயர் இயங்கும். ஒருவரது பெயர் சிறப்பான முறையில் அமையப்பெற்றால், அவர் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தவும், சந்தர்ப்பங்களைக் கைப்பற்றவும் சிறப்பாக வழி வகுக்கும்.

எண் சோதிடத்தில் எண்ணை நூற்றெட்டாக வகுத்துள்ளார்கள். இராசி மண்டலம் நூற்றியெட்டு நட்சத்திர பாதங்களைக் கொண்டது. இவ் நூற்றெட்டுப் பாதங்களைக் கணக்கிட்டும், பெயர் அமைக்க வேண்டும், அத்துடன் அவ்வவ் நட்சத்திர பாதங்களுக்குரிய நாம எழுத்துக்களையும், திசை எண்ணைக அனுசரித்துப் பெயர் அமைப்பது சாலச் சிறந்தது.

முதலாவதாக ஒருவரினது லக்கினத்திற்கு, யோகமான நட்சத்திர பாதத்தில் பெயர் அமைய வேண்டும். உதாரணமாக முப்பத்தியேழு எண் கொண்ட பெயர் 1, 4, 8 எண் ஆதிக்கர்களுக்குப் பொருத்மாக இருப்பினும், அவர்களது இலக்கினம் மகரமாயின், அது அட்டம இராசியில் இருப்பதால் அவருக்கு அப்பெயர் அதிர்ஷ்டத்தைக்

கொடுக்காது. ஆனால் அப்பெயர் மேட, துலா, விருச்சிக, தனு இலக்கினகாரர்களுக்கு நற்பலன் செய்யும். இதனாலேயே பலர், அதிர்ஷ்ட எண்களுக்குப் பெயர் மாற்றியும் நற்பலன்களைத் தரவில்லையென்று எண்சோதிடத்தில் நம்பிக்கை இழக்கின்றனர்.

இரண்டாவதாக ஒருவரது பெயர் ஆரம்பிக்கும்போது அப்பெயரின் முதல் எழுத்து திசை எண்ணால் ஆளப்படும். அவ்வெண் அதிர்ஷ்டகரமாக அமைந்தால்த்தான் அவரைச் சரியான வழியில் கொண்டு இயக்கி வழிநடத்தும்.

மூன்றாவதாக, அதிர்ஷ்டகரமாகப் பெயரை மாற்றியமைக்கும்பொழுது சில எழுத்துக்களை விபரீதமான ஓசைகளை எழுப்பும்படி அமைத்தல் நன்மை பயக்காது. உதாரணமாக :-

SIVASUBRAMANIAM என்ற நாமத்தை

SHIVA SHUPRAMANIEM என்று மாற்றியமைத்து நற்பலனை அடைய முடியாது. இவ்வாறு மாற்றம் செய்த பலர், துரதிஷ்டமான நிலையையே அடைந்ததை நாம் அனுபவத்தில் அறிகின்றோம். பெயரை மாற்றியமைக்கும்பொழுது, வழக்கமான நாமத்திற்குரிய எழுத்துக்களையே ஓசை மாறுபடாது உபயோகித்தல் வேண்டும்.

## பெயரெண்

ஒருவரது விதியை ஆராயும்பொழுது அவரது பெயரை அறிய வேண்டியது முக்கியமென்று கடந்த பகுதிகளிலிருந்து நாம் அறிந்திருக்கிறோம். பெயரெண், ஒருவருடைய விதி எண்ணுடனும். பிறப்பெண்ணுடனும் ஐக்கியப்பட்டே இயங்குகின்றது. பிறப்பு எண் ஒருவருடைய வெளித் தோற்றங்களையும், நடத்தைகளையும் குணா குணங்களையும் எடுத்துக்காட்டி நிற்க, விதி எண்ணானது அவரது அடித்தள மன இயல்புகளையும், அவருக்கு அமையக்கூடிய பலா பலன்களையும் காட்டுகின்றது, இவைகளை வெளிக்கொணர்ந்து உலகறியச் செய்வதே பெயரெண்ணாகும். இப் பெயர் எண் சரியான முறையில் அமைக்கப்படாவிடில், அப்பெயருடையவர் தனது ஆற்றல்களை எவ்வளவு தூரம் பயிற்றுவித்தாலும் உரிய அந்தஸ்தை அடைவதற்குரிய சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் கிடைக்காது போய்விடும் இதை ஓர் உதாரணம்மூலம் விளக்குவோம்.

ஒருவரது விதியெண்ணை ஓர் நீர் நிறைந்த தாங்கிக்கு ஒப்பிடலாம். தாங்கியிலிருந்து நீரை வெளியே கொண்டுவரப் பயன்படும் தண்ணீர்க் குழாய்க்குப் பிறப்பெண்ணை ஒப்பிட்டு ''நீர்திறவாயில்'' ஐ ஒருவரது பெயரெண்ணாகக் கொள்வோம். இவை மூன்றும் முறையாகப் பொருத்தப்பட்டு - இயக்கம் பெற்றால்த்தான் தண்ணீர்த் தொட்டியிலுள்ள நீருக்கு ஒப்பான தனி நபரது ஆற்றல்களை வெளிக் கொணர முடியும். ''நீர் திறவாயில்'' கருவி பிழைபட இயங்கின், தொட்டியிலுள்ள தண்ணீரைத் தகுந்த முறையில் வெளிக்கொணர முடியாததுபோல், பெயர் எண்ணும் பிழைபட இயங்கின், தனிமனித வாழ்வும் உரிய பயனைப் பெறாதுபோகும். இவ்வுதாரணத்தைக் கொண்டு, எண் சோதிடத்தின் முக்கியத்துவத்தையும், அதனால் மக்களுக்கு வரக்கூடிய அதிர்ஷ்டத்தையும், நீங்கள் இலகுவில் புரிந்து கொள்ளலாம். இதனை ஓர் படத்தின் மூலம்விளக்குவோம்.

★ (அட்டைப்பட விளக்கம் பார்க்கவும்)

எண்களுக்குரிய பெறுமானம், அவைகளுடைய ஒலி (சப்த) அசைவினால் பெறப்படும். ஆங்கில எழுத்துகளுக்குக் கொடுக்கப்பட்ட பெறுமானங்கள் பின்வருமாறு இருப்பதைப் பொருத்தமாகக் கொள்வோம்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

ஒருவரினது பெயர் எண்களையும், ஏனைய எண்களையும் விளங்கிக் கொள்ளும் முறையைப் பின்வரும் உதாரணம் மூலம் விளக்குவோம்.

உதாரணம் : A. AMIRTHALINGAM

1. 1 4 1 2 4 5 1 3 1 5 3 1 4

1 + 35 = 36

இவருடைய முழுப்பெயரெண் முப்பத்தியாறில் அமைந்துள்ளது ஒற்றை எண்ணில் இது கேதுவால் ஆளப்படும் ஒன்பதின் ஆதிக்க எண்ணாகும். கேது - விடுதலை, விமோசனம், போராட்டம், கட்டுப்பாட்டைத் தகர்த்தெறியும் தன்மையைக் குறிக்கும். இவரது முழுப் பெயர் எண், இவரது குணாதிசயங்களையும், உள்ளுணர்வுகளையும், ஆற்றல்களையும் வெளிக்காட்டுவதற்குரிய சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் எடுத்து வழங்குவதைக் காணலாம்.

இவரின் பிறந்த திகதி 26-8-1927.

எனவே, இவருடைய பிறப்பு எண் 8.

விதி எண் ~~9~~. 8

திசை எண் 1.

முதன்மை எண் 2.

சந்தர்ப்ப எண் 1.

முழுப்பெயர் எண் 36.

இவ்விடத்தில் அவரின் பிறப்பெண், விதிஎண் முதலிய எல்லா எண்களுடன் அவரது பெயர் எண் சரியான முறையில் அமைந்த காரணத்தால், அவர் தனது கொள்கைகளையும் ஆற்றல்களையும் வெளிக் கொணர்ந்து உலகின்கண் கலங்கா விளக்காகத் திகழ்கின்றார். பலராலும் தீது என்று வர்ணிக்கப்படும் எட்டு எண்ணில் பிறந்த இவருக்குத் தற்போது வகிக்கும் உயர்நிலை கிடைத்தற்கு அவரின் பெயரெண்ணின் ஒத்த இயக்கமே காரணமாயுள்ளது.

பொதுவாக எண்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்படும், அவை யாவன :—

I உலகாயித எண்கள்

II உணர்ச்சிவேக எண்கள்

III அறிவார்ந்த எண்கள்



## எண்களின் உறவுகள்

1 — 4 — 7 ⟶ உலகாயித எண்கள்

2 — 5 — 8 ⟶ உணர்ச்சிவேக எண்கள்

3 — 6 — 9 ⟶ அறிவார்ந்த எண்கள்

இவ்வெண்களை ஒன்றோடொன்று உறவுகொள்ள வைப்பது, எண் கணித சோதிடத்தின் ஓர் முக்கிய அம்சமாகும். ஒரு உலகாயித எண் அடுத்த உலகாயித எண்ணுடன் சிறப்பான முறையிலும், உணர்ச்சிவேக எண்ணுடன் சாதாரண முறையிலும் உறவுகொள்ளும். ஆனால் ஒரு அறிவார்ந்த எண்ணுடன் அது எவ்வித உறவும் கொள்ளாது.

ஓர் உணர்ச்சிவேக எண் தன் இன எண்ணுடன் சிறப்பாகவும், மற்றைய இனங்களுடன் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப சாதாரண முறையிலும் உறவு கொள்ளும்.

ஓர் அறிவார்ந்த எண் தன் இனத்துடன் சிறப்பான உறவும், உணர்ச்சிவேக எண்ணுடன் சாதாரண உறவும் கொண்டியங்கும். ஆனால் மற்றைய இனத்துடன் எவ்வித உறவும் கொள்ளாது நிற்கும்.

இவ்வெண்ணை உறவாக்கும் முறைகளில் பல நுண்ணிய செயற்பாடுகள் இருப்பதனால், அவற்றைத் தனித்தனியே ஆராய்தல் சிறப்பாகும். எண்கள் தத்தம் ஒலியசைவுகளுடன் இயங்கும்போது ஒரு வரையறு ஒழுங்குமுறையில் தமது அசைவுகளைப் பரப்புகின்றன. இரு நபர்களுக்கு ஒத்த அசைவுகள் ஏற்படும் பொழுதுதான், அவர்களுக்கிடையில் நல்லுறவு தோன்றுகிறது. இவ்வடிப்படையைக் கொண்டே நாம் மனித உறவுகளைப் பலப்படுத்துகிறோம். உதாரணமாக விவாகம் செய்யவிரும்பும் ஒரு ஆண், தனது எண்ணால் ஏற்படும் அசைவுகளுக்கு இசைவுள்ள ஒரு பெண்ணை மணந்தால், அவ்விருவருக்கும் விவாகக் கூட்டுறவு என்னும் மனைமாட்சி சிறப்பாக அமையும் இதே போன்று ஏனைய உறவு முறைகளும் கணிக்கப்படும். ஒத்த குணாதிசயமற்ற இருவர்கள் உறவு கொண்டு விடுபட முடியாத சூழ்நிலையில் ஐக்கியப்பட்டிருக்கும் நிலையில் ஒருவருடைய பெயரெண்ணில் மாற்றம் ஏற்படுத்தும் பொழுது அவர்களுக்கிடையில் பிரிவு ஏற்படுவதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது. இது மனித உறவுகளில் பெயரெண்ணின் பங்கைச் சிறப்பாக ஊர்ஜிதப்படுகிறது.

விவாகமென்பது ஆண்பெண் இருவருக்கிடையில் ஏற்படும் ஒரு சிறந்த மண உறவாகும். ஒருவரது சரீரக் கவர்ச்சியும் உணர்ச்சிவயப்படுந்தன்மையும், மற்றவரது சரீரக்கவர்ச்சியுடனும் உணர்ச்சிவயப்படுந் தன்மையுடனும் ஒத்ததாகும் பொழுதுதான், சிறந்த மணவாழ்வு அமைய ஏதுவாகின்றது.

1, 4, 7, ஆகிய உலகாயித எண்களில், 1, 7, ஆகிய எண்கள் ஆண் இயல்பும், 4 எண் பெண் இயல்பும் கொண்டவை. 1 அல்லது

7 எண்ணில் பிறந்த ஆண், 4 எண் பெண்ணை விவாகம் செய்தால் அது உத்தம விவாகப் பொருத்தம். இவை மாறி அமையின் அது மத்திம விவாகப் பொருத்தம்.

2, 5, 8 என்பவை உணர்ச்சிவேக எண்களாகும். இதில் 5 எண் ஆண் இயல்பையும், 2, 8 எண்கள் பெண் இயல்பையும் கொண்டவை. 5 எண்ணில் பிறந்த ஓர் ஆண், 2 அல்லது 8 எண்ணில் பிறந்த ஓர் பெண்ணுடன் விவாக உறவு கொள்வது, உத்தமப் பொருத்தமாகும். இதற்கு மாருக 2 அல்லது 8 எண்ணில் பிறந்த ஆண்கள், 5 எண் பெண்ணுடன் விவாக உறவு ஏற்படுத்திக்கொண்டால், அது மத்திமமான விவாக உறவேயாகும்.

3, 6, 9 ஆகிய அறிவார்ந்த எண்களில், 3, 9 ஆகிய எண்கள் ஆண் இயல்பும், 6 பெண் இயல்புங் கொண்டன. 3, 9 எண்களையுடைய ஆண்கள் 6 எண் பெண்ணை விவாகம் செய்தால், அது உத்தம விவாகப் பொருத்தம் எனக் கூறலாம். இவை மாறி அமையின் அது மத்திமப் பொருத்தமாகும்.

ஒரு விவாகப் பொருத்தம் பார்க்கும் சந்தர்ப்பத்தில் 3 எண்ணைப் பற்றி அவதானமாக இருக்கவேண்டும். 3 எண்ணைச் செவ்வாய்க் கிரகமே ஆளுகின்றது. செவ்வாய் இந்து சோதிட சாஸ்திரத்தில் விவாகக் குழப்பக்காரகனென்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இக்கிரகம் விவாகத்தைக் குறிக்கும் வீடுகளில் அமரும்போது, செவ்வாய் தோஷம் என்று கூறப்படும். செவ்வாய் ஓர் கொதிப்புள்ள, அமைதியற்ற திறமும், கோபம், உணர்ச்சிவேகங் கொண்ட கிரகம். எனவே 3 எண்ணில் பிறந்தோர், மற்றவர்களுடன் விவாக வாழ்க்கையில் தொடர்பு கொள்ளும்போது மிகவும் கஷ்டமடைகின்ருர்கள். இவர்கள் தங்களுடன் ஒத்த இன எண்காரர்களுடன் விவாகத் தொடர்பு கொள்வதன்மூலம் ஓரளவு, தங்களது வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்ளலாம்.

பிறப்பு எண் ஒருவரின் தன்முனைப்புச் சக்திகளைக் காட்டும். விதி எண் அடித்தள மன இயல்புகளையும், ஈற்றில் அடையும் பெறுபேற்றையும் குறிக்கும். விவாகக் கூட்டுறவில் ஒருவரின் பிறப்பெண், மற்றவரின் விதிஎண்ணுக அமையின், முன்னவர் பின்னவரின் ஈடேற்றப் பாதைக்கு உதவியாக அமைவார் என்றும், ஈற்றில் அவர்களினது பெறுபேறு வெற்றிகரமாக அமையும் என்றும் கூறலாம். பிறப்பு எண்ணும், விதி எண்ணும் ஒத்த இன எண்களாக அமையின், இருவர்களினதும் மண உறவு உன்னதமாக அமையும். விதியெண் ஒன்ருக அமையும் பட்சத்தில், இருவரினது உள்நோக்கங்களும் ஈற்றுப் பெறுபேறுகளும் ஒன்ருக அமைவதால், வாழ்வு பூரணத்துவம் பெறும். ஒத்த எண்களாக இருப்பினும் எதிர் எண்களாக மாற்றமடைந்தால் குறிக்கோள் பாழடையும்.



ஒருவரது கூட்டு எண், அவரின் துணைவியின் பெயர் எண்ணுக அமையின், அவர்களுடைய வாழ்க்கையை உன்னதப்படுத்த இருவரின் எண்களும் ஒத்து இயங்கும். இம்முறை மாறி வரினும் சிறப்பாக அமையும்.

ஒருவரின் பிறப்பெண், இன்னெருவரின் திசை எண்ணுடன் ஒத்த அசைவு பெற்றிருப்பினும், அவர்களுக்குள் காதல் உறவு ஏற்படுவதைப் பார்க்கின்ருேம். 7 எண்ணில் பிறந்த ஒருவர் D, T ஆகிய எழுத்துக்களில் பெயர் ஆரம்பிக்கும் ஒருவருடன் உறவு கொள்வதைக் காண்கிருேம். D, T ஆகிய எழுத்துக்கள் 4 எண்ணின் திசை எண். எனவே 4 ஆகிய பெண் எண், 7 ஆகிய ஆண் எண்ணுக்கு வசியமாகின்றது. இதையே வசியப் பொருத்தமென்று கூறுகின்ருேம். பிறப்பு எண், விதி எண், பெயர் எண், திசை எண் இவற்றுக்கிடையில் எவ்வித தொடர்புமின்றி இருப்பின், இருவரின் மணவாழ்க்கை நீடிக்காது மணவாழ்க்கையில் பெரும் பயன்களை அடைவதற்கு ஒருவரினது எண், மற்றவரின் எண்ணுடன் ஒத்த அசைவு பெற்றிருத்தல் மிக மிக அவசியம். மேற்கொண்ட விபரங்களை அவ்வவ் அத்தியாயங்களில் விபரமாக எடுத்தாள்வோம்.

# எண்களின் மேற்கொண்ட வரையறுவகைகள்

1, 3, 6, 7, 9 ஆகியன ஒற்றை எண்கள். அவை ஆண்தன்மை பொருந்தியவையும், தமது இயல்பில் காரண காரிய நோக்கமுடையவையுமாகும். 2, 4, 5, 8 ஆகிய இரட்டை எண்கள் பெண் தன்மை பொருந்தியவையும், ஆளப்படுபவையுமாக அமைந்துள்ளன. முன்னவை உற்பத்திக்கும் முன்னேற்றத்திற்கும் உரியவை. பின்னவை அவற்றை ஏற்றுக்கொள்பவை.

ஆண் எண்கள் மனிதனின் சுயத்துவத்தை வெளிக்கொண்டு வருபவை. ஆனால் பெண் எண்கள் அவைக்கு ஏற்றவாறு ஒத்துழைத்துத் துணைபுரிபவை. எண்களை அவைகளினது இயல்புக்கேற்ப, இன்னும் வேறுவகைகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு எண்ணிற்கும் இன்னோர் எண் சமாந்தர நிரப்பு எண்ணாக அமையும்.

1 இன் சமாந்தர நிரப்பு எண் 9
2 இன் சமாந்தர நிரப்பு எண் 8
3 இன் சமாந்தர நிரப்பு எண் 7
4 இன் சமாந்தர நிரப்பு எண் 6

5 யாவற்றையும் ஈடுசெய்யும் எண்ணாகும். இவ் எண்ணிற்குச் சமாந்தர நிரப்பு எண் இல்லை. எவ்வெண்ணுடன் சேர்ந்தாலும் அவ்வெண்ணைத் துரிதப்படுத்தி இயக்குவிக்கும்.

மேற்கூறிய இவ்வெண்களின் தன்மைகளை இன்னும் சிறிது விளக்குவோம். எண் ஒன்றின் சின்னம் இராஜமுடி. இவ்வெண் அதிகாரத்திற்கும் உயர் அந்தஸ்திற்குமுரியது. இதனது சமாந்தர நிரப்பு எண்ணாகிய 9 எண்ணின் சின்னம் உரங்கொண்ட வீரக்கை. இது அடிமைத்தளையிலிருந்து விமோசனமும் விடுதலையும் பெறத்துடிக்கும் சுபாவங்கொண்ட, எண்ணாகச் செயற்படுகின்றது.

எண் இரண்டிற்கு எட்டு எண் சமாந்தர நிரப்பு எண்ணாகும். இவ்விரண்டு எண்களும் ஒரே உணர்ச்சிவேக இனத்தைச் சார்ந்தவையாக இருப்பினும், உண்மையில் அவை இயல்பில் எதிர்த்தன்மை வாய்ந்தவை. குணாதிசயங்களில் ஓரளவு ஒத்தவை. இரண்டு எண் சார்ந்து கூடிவாழும் தன்மையும், ஈய்ந்து கொடுக்கும் இயல்பும் வாய்ந்தது. இதன் சின்னம் ஜனத்திரள் ஆகும். ஆனால் எட்டு எண் உலகாயித மாயையால் உலகப் புகழிற்காகத் துடித்து நிற்கின்றது இதற்கு அடையாளம் இடிமுழக்கம். இரண்டு எண் மனதையும், எட்டு எண் மாயையும் குறிக்கும். இரண்டு எண் 8 எண்ணின் மாயையிலிருந்து விடுபடத்துடிக்கும் எண்ணாகும்.



எண் மூன்றிற்குச் சமாந்தர நிரப்பு எண் 7 ஆகும். 3 எண்ணானது இளமைப் பருவங் கொண்டதும், விவாத இயல்புகளை விரும்பி நிற்பதும், போராட்ட இயல்பு வாய்ந்தது மாகும். எனவே இதன் சின்னம் வாள். இதற்குச் சமாந்தர நிரப்பு எண்ணாகிய ஏழு எண் ஒரு முதிர்ந்த ஞான இயல்பையும், அசாதாரணப் போக்கையும், எதையும் சீர்தூக்கி அறியும் ஞானத்தையும் உடையதால், இதன் அடையாளம் தராசு. சனி உச்சம் பெறுவது தராசு ஆல் அடையாளம் குறிக்கப்படும் துலா இராசியிலேயாகும்.

எண் 4 ற்கும் 6 க்கும் இடையில் ஓர் விசித்திர உணர்வு வேறுபாடு அமைந்துள்ளது. எண் 4 அமைதியற்றதும், பரபரப்பும், எழுச்சியும் வாய்ந்தது. இதன் சின்னம் புயற்காற்று. ஆனால் எண் ஆறானது இனிமையும், அழகும், சாந்தமும், சௌபாக்கியங்களும் கொண்டது. இதன் சின்னம் அழகிய அடிவானம்.

எண் 5 ஆனது 4, 6 ஆகிய எண்களுக்கிடையில் ஒரு மென்மையான படையாக அமைந்துள்ளது. இவ்வெண் ஏனைய எண்களுடன் சேர்ந்து அவ்வெண்களின் எதிர்ப்பு, தாக்கம், விவேகம் யாவற்றையும் நிரப்ப உதவுவது. இது மற்றைய எண்களுடன் சேரும்பொழுது அவ்வெண்களின் தன்மையை விரிவுபடுத்தி வளர்ச்சியுறவைக்கும். இதன் சின்னம் சுழலும் சக்கரம்.

இன்னோர் விதமாகவும் எண்களை நாம் அணுகுவோம். அவை பால் பகுப்பு முறையாகும். ஆண்மைக் குணம் மிக்க எண்களாகிய 1, 3, 5, 7, 9 ஆகிய எண்களை, பெண்மைக் குணம் மிக்கதாகிய 2, 4, 6, 8 ஆகிய எண்களுடன் உறவு கொள்ள வைக்கும்போது, அவை ஒன்றையொன்று பூரணப்படுத்தி வைக்கும். இதற்குள் 3 எண் மாத்திரம், வேறு எந்த எண்ணுடனும் ஒத்து இயங்கச் சிரமப்படும். இந்து சோதிடத்தில் ஒன்று எண் சிவனென்றும், இரண்டு எண் உமையென்றும், மூன்று எண் குருபரன் என்றும் விளக்கப்பட்டுள்ளது. இது ஒன்றினதும் இரண்டினதும் சேர்க்கையால் உண்டாகும்—துடியார்வம் மிக்க, பிள்ளைப் பருவத்தைக் குறிக்கும். இது பரபரப்பு, கவலை, ஆவல், அமைதியின்மை முதலிய குண குணங்களைக் கொண்டிருப்பதால், மற்றைய எண்களுடன் உறவு கொள்வதில் சிரமப்படும். 1 எண் 1 ற்கும், 4 எண் 7 ற்கும், 5 எண் 8 க்கும், 6 எண் 9 க்கும் ஒத்து இயங்குகின்றன. எண்களை ஒன்றோடொன்று சேர்க்கும் போது பிறப்பு எண்களுக்கு விதி எண்களிலும் பார்க்க முக்கியத்துவம் தரப்படும்.

எண்களில் சுப, அசுப, நடுநிலை எண்களைப் பின்வருமாறு வர்ணிக்கலாம்.

5, 6, 7 எண்கள் சுப எண்கள்.

2, 4, 8 எண்கள் அசுப எண்கள்.

1, 3, 9 எண்கள் நடுநிலை எண்களாகும்.

சுப எண்களில் 5 எண் விரிவையும், ஆக்கத்தையும், உற்பத்திப் பெருக்கத்தையும் கொடுக்கிறது. இவ் எண் உடையோர் பலதரப் பட்ட விடயங்களுக்குள் தங்களை ஈடுபடுத்த ஆரம்பித்தால், முற்றுப் பெருது திணறுவார்கள். 6 எண் சந்தோஷம், கலை, அழகு, சௌபாக்கியம், இலட்சுமிகரம் இவைகளை முன்னேற்றப்படுத்தும். 7 எண் அசாதாரண கலை ஞானம், ஆன்மீக வளர்ச்சி, துலாக்கோல் நீதி, தர்ம இயல்பு கொண்டது. சில சமயங்களில் இவ்வெண்ணில் சமுதாயத்தோடு ஒத்துப் போக முடியாத அசாதாரணப் போக்குள்ள வர்களையும் காண்கின்றோம்.

பாப எண்களாகிய 2, 4, 8 எண்களில், 2 எண்ணுனது சுயநலப் போக்கும், உணர்ச்சி வேகமும் கொண்டது. 4 எண் விஷயங்களில் வழுவழுப்புத் தன்மையுடையது. 8 எண் அழிவையும், இன்னல்களையும் குறிப்பதாகும்.

நடுநிலை எண்களில், 1 எண் நன்மைகளையும், தீமைகளையும் வழங்கும். அவ்வெண் தான் சேரும் எண்களைப் பொறுத்து விஷேட பலன்களைக் கொடுக்கிறது. 3 எண் எரிச்சலடையும் தன்மையும், ஒத்துப் போகாத குணங்களும் கொண்டது. 9 எண் போராட்ட இயல்பும், அடக்கு முறையிலிருந்து விடுபட முயலும் சுதந்திர தாகமும் உடையது.

ஒரு குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களின் எண்களை எடுத்து நாம் ஆராயுங்கால், 5, 6, 7 எண் கொண்டவர்கள் 1, 3, 9 எண் களுடன் சேர்ந்து மிகவும் உன்னதமான நிலையை அடைவதை நாம் அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. இதற்கு மாருக ஒரு குடும்பத் தில் அநேகருக்கு 2, 4, 8 எண்கள் அமைந்தால் அக்குடும்பத்தில் சிக்கல்களும், குழப்பங்களுமே மேலோங்கி நிற்கும்.



விவாகப் பொருத்தங்களை ஆராயும்போது 2, 4, 8 எண் ஆதிக் கரைக் கணவன் மனைவியாகச் சேர்ப்பது விரும்பத்தக்கதெனினும், இவை பாபக்கிரகங்களினுல் ஆளப்படுவதால் இவர்கள் உறவில் சமா தானக் குறைவு காணப்படும். 2, 4, 8 எண்காரர் 1, 7 எண்காரருடன் இசைவுபட வாழலாம். 8 எண் காரர் 5 எண்ணுடனும், 1 எண்ணுட னும் ஓரளவிற்கு ஒத்துப் போகலாம். 3 எண் 2 அல்லது 9 எண்ணுட னும் ஒத்துழைக்க முயற்சிக்கும்.

மேற்கூறியவாறு எண்களைப் பல கோணங்களிலிருந்து ஆராயலாம்.

எண்களின் வெளித்தன்மை, உட்தன்மைகளை நுட்பமான முறையில் அறிந்த ஒருவரையே சிறப்பாக எண்கணித சோதிடத்தில் பாண்டித்தியம் பெற்றவரெனக் கொள்ளலாம். இந்து சோதிட சாஸ்திரத்தில் பூரண அறிவு அமையாவிடில், எண்களின் இயல்புகளைப் பூரணப்படுத்தி அறிய முடியாதென்பதை நாம் மேலே கூறிய விபரங்களிலிருந்து, நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.


ஒரு விளையாட்டுப் போட்டிக்கு ஆட்தேர்வு நடத்தும் பொழுது போராட்ட இயல்புள்ளவர்களைத் தெரிவு செய்தல், விளையாட்டின் உற்சாகத்திற்கும், சிறப்பிற்கும் நன்மை பயக்கும். எண்களின் உறவு முறைகளை, நாம் மேலே விபரித்த முறைக்கொப்ப, விவாக உறவு முறைகளுக்கு மாத்திரமல்ல, கூட்டுத் தொழில் நடாத்துவதற்கும், சங்கங்கள் அமைப்பதற்கும் அவற்றைக் கையாண்டு மேன்மையுறுவோம்.

நாம் இதுவரை மேலே கூறிய விளக்கங்கள், எண்களின் தன்மைகளைச் சுருங்க விளங்கப்படுத்தும். மேலும் இவ்வெண்களின் தனித்தனி அத்தியாயங்களிலும், விசேட அத்தியாயங்களிலும், அவ் வவ் எண்களுக்குரிய நிறங்கள், இரத்தினங்கள், ஆரோக்கிய அந்தஸ் துக்கள், மணவாழ்க்கை மற்றும் இன்னோரன்ன குறிப்புகளை விரிவுபட விளக்குவோம்.


குறிப்பு : மேற்கொண்ட விபரங்களுக்குத் தொடரும் எமது வெளியீடுகளை விரைவில் எதிர்பாருங்கள்.

— சுபம் —


# எண்களின் சின்னங்கள்



1 Crown



2 Masses



3 Sword



9 Fist


8 Serpent


7 Scale


6 Horizon


5 Wheel


4 Tempest

1 இராஜமுடி

2 ஜனத்திரள்

3 வாள்

4 புயற்காற்று

5 சுழல் சக்கரம்

6 அழகிய அடிவானம்

7 தராசு

8 இடிமுழக்கம் (பாம்பு)

9 உரங்கொண்ட விரக்கை